1277

1277

திருப்புகழ் வெளியீடு 3.

திருப்புகழ் பஜனை

ஸ்ரீமான்

T. M. கிருஷ்ணஸ்வாமி அய்யர் தொகுத்தது

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
16 SEP 1940
MADRAS

பாராயண முறை

பி. டி. பாணி கம்பெனி,
திருவல்லிக்கேணி, மதராஸ். [அணா 2.

ஸ்ரீ வடபழனி ஆண்டவர் துணை.

அன்பே வாழ்வு' அருளே செல்வம்''
நோன்பே நினைவு''' பொருளே ஸோகம்''''

ஊனினையுருக்கிடும் முருகாவெனும் நாமம்
தேனினை சொரிந்திடும் முருகாவெனும் நாமம்
ஊழ்வினைகளைந்திடும் முருகாவெனும் நாமம்
வாழ்பதம் அளித்திடும் முருகாவெனும் நாமம்

சக்திகளிப்பதும் திருப்புகழே
சக்திதரனது திருப்புகழே
பக்தி தருவதும் திருப்புகழே
முக்தி யளிப்பதும் திருப்புகழே.

உருகன் புருவினர் செம்பொன் மேனியர்
அருள் மொழிநோன்பினர் நீறணிமெய்யினர்
இருள்கெடுஜோதியர் உள்ளொளி உறைபவர்
பொருள் தருபுண்ணியர் மயிலுறை மன்னவர்.

ஆணவமெனும் அந்தகனை நீருக்கி-எவரும் காணப்பேரன் பாகப்பெறுக்கியே,திருவடியைப்பூண்டு மகிழ்-பெரியோரகத்திற்கே-பாயப்பெற்றோர் தம்வினை நாணவுமே மூவுலகும் பேணவுமே நிற்பர் கண்டீர் ஜகத்திரே.

விரிந்தவானம் தன் பரந்த வெளியின் மைதான் மறந்தாலும் அருந்தவர்தாம் தூங்காமலே பெறும் தம்தூக்க மறந்தாலும் பாடிய பெரியோர் வீடேயளித்திடும் தூயநற் சொற்பண் மறந்தாலும், நாடிய உலகம்நலமே பெற ஆடியமெய்யடிதனை மறந்தாலும், பிறந்தசிசுதான் பாலமுதளிக்கும் தாய் முலை மறந்தாலும்,வளர்ந்த பயிர் தளர்ந்தபோது வளப்பமீன்றகார்தான் மறந்தாலும் இறந்தவர்க்குகெதியடங்க வளிக்கும் நின்கருணைதான் எனை மறந்தாலும், பரந்த என் மனம் மலர்ந்த நின்னடி மறக்குமோ எந்தை செந்தில் காவலனே.

பித்தனோ நின் தந்தை, ஞானவித்தனோ நீமைந்த
நித்யனோநீதேவா ' நிமித்தமோ நின்ஜெனனம்
அத்தனே நீயென்றெண்ணி அனுதினமும் யான் பணிந்தேன்
கர்த்தனே கற்பகமே கலிதீர்த்தெனை யாள்வாய்

விருத்தம்.

நாதநாமக்கிரியை.

நித்தியானந்தமாகி நிஷ்கள ஸ்வரூபியாகி
சத்தியாய்ச் சிவமுமாகி—த்தாணுவாயுலகுக்
கெல்லாம்
சித்தியாய் முக்தியாகி திகழ்பரமார்த்தமாகி
அத்தியின் உருவமான அண்ணலே வணங்கு
வோமே. (1)

நாதநாமக்கிரியை—ஆதி.

மூஷிகவாஹன மோதகஹஸ்த
சாமரகர்ண விளம்பிதசூத்ர
வாமனரூப மஹேச்வரபுத்ர
விக்னவிநாயக பாத நமஸ்தே (2)

நாட்டை—ஆதி.

கைத்தல நிறைகனி அப்பமொ டவல்பொரி
கப்பிய கரிமுக னடிபேணிக்
கற்றிடு மடியவர் புத்தியி லுறைபவ
கற்பக மெனவினை கடிதேகும்
மத்தமு மதியமும் வைத்திடு மரன்மகன்
மற்பொரு திரள்புய மதயானை
மத்தள வயிறனை உத்தமி புதல்வனை
மட்டவிழ் மலர்கொடு பணிவேனே

முத்தமிழடைவினை முற்படு கிரிதனில்
முற்பட எழுதிய முதல்வோனே
முப்புர மெரிசெய்த அச்சிவ னுறைரதம்
அச்சது பொடிசெய்த அதிதீரா
அத்துய ரதுகொடு சுப்பிர மணிபடும்
அப்புன மதனிடை யிபமாகி
அக்குற மகளுட னச்சிறு முருகனை
அக்கண மணமருள் பெருமாளே. (3)

ஆனந்தபைரவி - ஆதி.

உம்பர்தருத் தேனுமணிக் கசிவாகி
ஒண்கடலிற் றேனமுதத் துணர்வூறி
இன்ப ரசத் தேபருகிப் பலகாலும்
என்றனுயிர்க் காதரவுற் றருள்வாயே
தம்பிதனக் காகவனத் தணைவோனே
தந்தைவலத் தாலருள்கைக் கனியோனே
அன்பர் தமக் கானநிலைப் பொருளோனே
ஐந்துகரத் தானைமுகப் பெருமாளே (4)

குரு ஸ்தோத்ரம்.

விருத்தம்.

சங்கராபரணம்

சாருஜலபக்ஷணிகளொருகோடியல்லாற்
சகோரபக்ஷிகள் போலவே

தவளநில வொழுகமிர்த் தாரையுண்டழியாத
தன்மையரனந்தகோடி
இருவினை களற்றிரவு பகலென்பதறியாத
வேதாந்தமோன ஞான
வின்பநிஷ்டையர்கோடி மணிமந்த்ரசித்திநிலை
யெய்தினர்கள் கோடிசூழக்
குருமணி யிழைத்திட்ட சிங்காதனத்தின் மிசை
கொலுவீற்றிருக்கு நின்னைக்
கும்பிட்டனந்த முறை தெண்டனிட்டென்மனக்
குறையெலாந் தீரும்வண்ணம்
மருமலரெடுத்துனிருதாளையர்ச்சிக்கவெனை
வாவென்றழைப்பதென்நாண்
மந்த்ரகுருவே யோக தந்த்ரகுருவே மூலன்
மரபில்வருமௌன குருவே. (1)

சங்கராபரணம்—சாபு.

காலடீபவ ஶங்காரத் வைதரக்ஷக பவதாரக
கால கால க்ருபாநிதே வடமூலவாஸின் தேஶிக
மூலகாரண முக்திதாயக பரமஹம்ஸ ஜகத்குரோ
கால பீதிம் நிவாரய பரமாத்ம தத்வ போதய
[காலடியிலவதரித்த கருணைப் பெருங்கடலே நின்
காலடியே தஞ்சமென்று காலங்கழிக்கலானேன்

காலபயங் தீர்த்துக்கடுகியே வந்தெங்கள்
காலடி ஓயுமுன்னே நின்காலடி சேர்ப்பிப்பாயே.]

அம்பாள் ஸ்தோத்ரம்.

செஞ்சுருட்டி-ஆதி-மத்யமம்

பர்வதராஜ குமாரிபவானி பஞ்சய கிருபையா மமதாரி
தானி
தீனதயாபரி பூர்ணகடாக்ஷி திருபுரசுந்தரி தேவி
மீனாக்ஷி
ஆரணி நாரணி காரணி நீலி பூரணியோக புராதனசீலி
சங்கரநாயகி சாந்தமஹேச்வரி சுந்தரிவேத விதக்ஷிணி
கௌரி
அம்பசிதம்பரநாத நடேச்வரி அம்பண கரதலி
தேவி ஸர்வேச்வரி
சம்புமோஹினி சாந்ததயாமணி துன்பபேதினி சோக
நிவாரணி
பஞ்சதசாக்ஷர பஞ்சரவாஸினி குஞ்சிதபாத மஹேச
விலாஸினி
மலைதருமகளே மடமயிலே மதிமுகவமுதே
இளங்குயிலே
ஆநந்தக்கொடியே இளம்பிடியே அர்ப்புதத்தேனே
மலைமானே.

கஞ்சி காமாக்ஷி காசி விசாலாக்ஷி
காருண்யலாவண்ய அகிலாண்டேச்வரி
பர்வத ராஜ குமாரி .... மமதுரிதானி

சிவ ஸ்தோத்ரம்.

தேவாரம்.

பைரவி

குற்றநீ குணங்கணீ—கூடலால வாயிலாய்
சுற்றநீ பிரானுநீ தொடர்ந்திலங்கு சோதிநீ
கற்றநூற் கருத்துநீ யருத்தமின்ப மென்றிவை
முற்றுநீ புகழ்ந்துமுன் னுரைப்பதென் முகம்மனே.

விஷ்ணு ஸ்தோத்ரம்.

பைரவி (நம்மாழ்வார்.)

முனியே! நான்முகனே! முக்கண்ணப்பா என்
பொல்லாக்
கனிவாய்த் தாமரைக்கண் கருமாணிக்கமே என்கள்வா
தனியே னாருயிரே! என்தலைமிசையாய் வந்திட்டு
இனிநான் போகலொட்டேன் ஒன்றும் மாயஞ்
செய்யேல் என்னையே

திருப்புகழ்.

அழைப்பு.

இ-காபி-ஆதி.

குருபரா குகா ஷண்முகா வெற்றி வேலா வாவா
வள்ளி தெய்வயானை மருவு மயில் முருகா வாவா
அன்பர்மனம் வீற்றிருக்கும் ஆண்டவா நீ வாவா
ஆறுபடை வீடுடையாய் இன்பமாய் நீ வாவா
இன்புருகு சிந்தையிலே இலகும் ஈசா வாவா
ஈசற்குபதேசம் செய்த உத்தமனே வாவா
உம்பர்கட் குவப்பளித்த ஊழியனே வாவா
ஊனுயிரும் கலந்துநின்ற எங்கள் கோவே வாவா
எண்ணே கண்ணே என்று ஏத்த இசைந்து நின்றாய் வாவா
ஏத்தி உன்னைத்தொழுவோர் வினைகளைந்திடுவாய் வாவா
ஐங்கரனுக் கருமைத் தம்பியான அழகா வாவா
ஒன்றும் பலவும வெளியொளியாய் ஓங்கிநின்றாய் வாவா
ஓதற்கரிய ஔதார்ய அடியர்வாழ்வே வாவா
ஔவையா ரருணகிரி பாட்டுவித்தாய் வாவா. (குருபரா)

பாசு-ஆதி

நாடா பிறப்புமுடி யாதோவெ னக்கருதி
நாயே மாற்றுமொழி வினையாயின்

நாதா திருச்சபையினேருது சித்தமென
நாலா வகைக்குமென தருள்பேசி
வாடா மலர்ப்பதவி தாதா எனக்குழறி
வாய்பா றிநிற்குமடி யவரோடு
வாராய் மனக்கவலை தீராய் எனத்தொழுது
வாரே னெனக்குமெதிர் வரவேணும்;
சூடா மணிப்பிரபை ரூபாகனத்தவரி
சூழா சலத்தியுமை யருள்பாலா
தூயா துதித்தவர்கள் நேயாவெ மக்கமிர்த
தோழா கடப்பமல ரணிவோனே
ஏடார் குழற்சுருபி ஞானூத னத்திமிகு
மேராள் குறத்திதிரு மணவாளா
ஈசா தனிப்புலிசை வாழ்வேசு ரத்திரளை
ஈடேற வைத்தபுகழ் பெருமாளே. (2)

கமாஸ்-கண்டஜாதித்ரிபுடை.

காரணம தாகவந்து புவிமீதே
காலனணு காதிசைந்து கதிகாண
நாரணனும் வேதன்முன்பு தெரியாத
ஞானநடமே புரிந்து வருவாயே;
ஆரமுத மான தந்தி மணவாளா
ஆறுமுக மாறிரண்டு விழியோனே
சூரர்கிளை மாளவென்ற கதிர்வேலா
சோலைமலை மேவிநின்ற பெருமாளே. (3)

கதனகுதூகலம்—ஆதி.

விறல்மார னைந்து மலர்வாளி சிந்த
மிகவானி லிந்து வெயில்காய
மீதவாடைவந்து’ தழல்போலவொன்ற
வினைமாதர் தந்தம் வசைகூற
குறவாணர் குன்றி லுறைபேதை கொண்ட
கொடிதான துன்ப மயல்தீர
குளிர்மாலை யின்க ணணிமாலை தந்து
குறைதீர வந்து குறுகாயோ
மறிமானு கந்த இறையோன் மகிழ்ந்து
வழிபாடு தந்த மதியாளா
மலைமாவுசிந்த அலைவேலை யஞ்ச
வடிவேலெ றிந்த அதிதீரா
அறிவால றிந்து னிருதாளி றைஞ்சு
மடியாரிடைஞ்சல் களைவோனே
அழகான செம்பொன் மயில்மேல மர்ந்து
அலைவாயுகந்த பெருமாளே. (4)

அசாவேரி-கண்டசாபு.

கேதகைய பூமுடித்த மாதர்தம யாலி லுற்று
கேவலம தான அற்ப நினைவாலே
கேள்வியதி லாதிருக்கு மூழ்வினையி னூல் மிகுத்த
கேடுறுக வேநினைக்கும் வினையாலே

வேதனையிலேமிகுத்த பாதகனு மாயவத்தில்
மேதினியெ லாமுழற்று மடியேனே
வீடுதவி யாளவெற்றி வேல்கரம தேயெடுத்து
வீறுமயில் மீதிலுற்று வருவாயே;
நீதிநெறி யேயழித்த தாருகனை வே றறுத்து
நீடுபுகழ் தேவரிற்கள் குடியேற.
நீடருளினல் விடுத்த பாலகுமராசெழித்த
நீலநிற மால்தனக்கு மருகோனே
சோதியன லாவுதித்த சோணகிரி மாமலைக்குள்
சோபைவட கோபுரத்தி லுறைவோனே
சோனைமழை போலெதிர்த்த தானவர்கள் மாளவெற்றி
தோளின்மிசை வாளெடுத்த பெருமாளே. (5)

வரவு கூறல்

விருத்தம்.

(ஸிம்மேந்திரமத்யமம்)

அருவமு முருவுமாகி யனாதியாய்ப் பலவாயொன்றாய்ப்
பிரமமாய் நின்ற சோதிப் பிழம்பதோர் மேனியாகக்
கருணைகூர் முகங்களாறுங் கரங்கள் பன்னிரண்டுங்
கொண்டே
ஒரு திருமுருகன் வந்தாங் குதித்தன னுலகமுய்ய. (1)

(விருத்தம்)

ஆறுமுகந் தலை வைத்தான் ஆருத இடர்கொண்ட வண்டருக்கு ஆறுமுகமாய் தன்னையே தான் அளித்த வாறோ - பூதமைந்தும் பொறார்கரிய சுடர் பொறிக ளாருகி சமுத்திர மனைய அலைவீசும் சரவணப் பொய் கையில் வீழ்ந்து மூழ்கிப் பயின்று அளைந்து விளையாடி என்னி தயத் துறைமுகமேறிய வள்ளலே - என் மலவகையாம் மாறு முகவசுரர் தமை வீழ்த்திட்டவென் செல்வமே கைம்மாறு முகமாய் ஏதளிப்பேன், எளி யேன் என்னையே யளிக்கின்றேன். என்றருள்வாய் - முருகனே - மாலோன் மருகனே ஹிமகுமரி பயந் துதவும், சேயே என்னுள் வளர்ந்து எங்கும் நிறைந்து எமையாட் கொண்ட தேவ தேவே. (டி. எம். கே.)

மாலை

சுருட்டி-ரூபகம்.

ஆசைகூர் பக்த னேன்மனோ பத்ம
மானபூ வைத்து நடுவேயன்
பானநூ விட்டு நாவிலே சித்ர
மாகவே கட்டி யொருஞான
வாசம்வீ சிப்ர காசியா நிற்ப
மாகிலோர் புத்தி யளிபாட
மாத்ருகா புஷ்ப மாலைகோலப்ர
வாளபா தத்தி லணிவேனோ;

மூசுகா னத்து மீதுவாழ் முத்த
மூால்வே டிச்சி தனபார
மூழ்குநீ பப்ர தாபமார் பத்த
மூரிவே ழத்தின் மயில்வாழ்வே
வீசுமீ னப்ப யோதிவாய் விட்டு
வேகவே தித்து வருமாசூர்
வீழமோ திப்ப ராரைநா கத்து
வீரவேல் தொட்ட பெருமாளே. (1)

அர்ச்சனை

காஹரப்ரியா-ஆதி.

சரவண ஜாதா நமோ நம கருணைய தீதா நமோ நம
சததள பாதா நமோ நம அபிராம
தருணக தீரா நமோ நம நிருபமர் வீரா நமோ நம
சமதள வூரா நமோ நம ஜகதீச
பரம சொரூபா நமோ நம சுரர்பதி பூபா நமோ நம
பரிமள நீபா நமோ நம உமைகாளி
பகவதி பாலா நமோ நம இகபர மூலா நமோ நம
பவுருஷ சீலா நமோ நம அருள் தாராய்;
இரவியு மாகாச பூமியும் விரவிய தூளே றவானவ
ரெவர்களு மீடேற எழ்கடல் முறையோவென்
றிடர்பட மாமேரு பூதர மிடிபட வேதா னிசாசர
ரிகல்கெட மாவே கநீடயில் விடுவோனே

மரகத ஆகார ஆயனு மிரணிய ஆகார வேதனும்
வசுவெனு மாகார ஈசனு மடிபேண
மயிலுறை வாழ்வே விநாயகமலை யுறைவேலா மகீதர
வனசர ராதா ரமாகிய பெருமாளே. (1)

சங்கராபரணம்-ஆதி.

உம்பர்கள் ஸ்வாமீ நமோ நம
எம்பெருமானே நமோ நம
ஒண்டொடி மோகா நமோ நம எனநாளும்
உன்புகழேபாடி நானினி
அன்புட னாசார பூசைசெய்
துய்ந்திடவீணாள் படாதருள் புரிவாயே
பம்பர மேபோ லஆடிய
சங்கரிவேதா ளநாயகி
பங்கய சீபா தநூபுரி கரசூலி
பங்கமி லாநீ லிமோடிப
யங்கரி மாகா ளியோகினி
பண்டு சு ராபா னசூரனே டெதிர்போர்கண்
டெம்புதல் வாவா ழிவாழியெ
னும்படி வீறு னவேல் தர
என்றுமு ளானே மனோகர வயலூரா
இன்சொல்வி சாகா க்ருபாகர
செந்திலில் வாழ்வா கியேயடி
யென்றனை யீடே றவாழ்வருள் பெருமாளே. (2)

சங்காரபரணம் - ஆதி.

நாத விந்துக லாதீ நமோ நம
வேத மந்த்ர சொரூபா நமோ நம
ஞான பண்டித ஸ்வாமீ நமோ நம வெகுகோடி
நாமசம்புகு மாரா நமோ நம
போகஅந்தரி பாலா நமோ நம
நாகபந்தம யூரா நமோ நம பரசூரர்
சேததண்ட விநோதா நமோ நம
கீத கிண்கிணி பாதா நமோ நம
தீர சம்ப்ரம வீரா நமோ நம கிரிராஜ
தீபமங்கள ஜோதீ நமோ நம
தூய அம்பல லீலா நமோ நம
தேவ குஞ்சரி பாகா நமோ நம அருள்தாராய்;
ஈதலும்பல கோலால பூஜையும்
ஓதலுங்குண ஆசார நீதியும்
ஈரமுங்குரு சீர்பாத சேவையும் மறவாத
ஏழ்தலம்புகழ் காவேரி யால்விளை
சோழமண்டல மீதேம னோகர
ராஜகெம்பிர நாடாளு நாயக வயலூரா
ஆதரம்பயி லாரூரர் தோழமை
சேர்தல்கொண்டவ ரோடேமு னாளினில்
ஆடல் வெம்பரி மீதேறி மாகயி லையிலேகி

ஆதியந்தவு லாவாசு பாடிய
சேரர் கொங்குவை காவூர்ந னாடதில்
ஆவினன்குடி வாழ்வான தேவர்கள்
பெருமாளே. (3)

குறிஞ்சி

ரூபகம்—(திஸ்ரம்)

ஒரு பொழுது மிருசரண நேசத்தேவைத் துணரேனே
உனதுபழ நிமலையெனு மூரைச்சேவித்தறியேனே
பெருபுவியி லுயர்வரிய வாழ்வைத் தீரக் குறியேனே
பிறவியற நினைகுவனெனுமாசைப் பாடைத்
தவிரேனோ!
துரிதமிடு நிருதர்புர சூறைக்காரப் பெருமாளே
தொழுதுவழி படுமடியர் காவற்காரப் பெருமாளே
விருதுகவி விதரணவி நோதக்காரப் பெருமாளே
விறன் மறவர் சிறுமி திருவேளைக்காரப்
பெருமாளே

அலங்காரம்

விருத்தம்.

சாவேரி.

வேதா கம சித்ர வேலா யுதன் வெட்கி பூத்ததண்டைப்
பாதாரவிந்த மரணாக வல்லும் பகலுமில்லாச்
சூதான தற்ற வெளிக்கே யொளித்துச் சும் மாவிருக்கப்
போதா யினிமன மேதெரி யாதொரு பூதர்க்குமே.

விருத்தம்.

இருவினையும் மும்மலமும் ஆளுமோர் ஐவரும் என்னுளமெனும் வீட்டில் இருள்பரப்பி மோக போக அந்தகாரத் தனிச்சிறைதனில் வீட்டி, எண்ணரிய அல்லலிட்டு, ஓயாத துன்பம் விளைத்து நிற்க, துணையிலேன், கதியிலேன், என்னப்பா, எனையீன்ற என்னையனே-நீ வா-உன் தாள்தா-உன்துணை சேர் என்று யான் அலறி அலறிக் கூச்சலிட்டேன்-ப்ரகாச உல்லாச-அதி விலாஸ-நாகபாச மயிலேறிவந்து நின் செஞ்சுடர் வேல் என்னிருள் கடிய-செஞ்சேவல் அபயம் கூவி-ஞானப் பிரகாசமொடு கூட்ட பூசுரர்கள் இசைபாட விண்ணவர்கள் மகிழ்ந்து கூட, அடியேனை உன்னுடன் சேர்த்து ஆண்டருள்வாய், திருப்பரங் குன்றத்து அருட் பெருஞ் ஜோதியே அத்திக்கிறைவனே அடியேனை மகிழ்விக்கும் மதுரை நிறைமகள் ஈன்றிட்ட என்னகக் குமரனே.

சுத்த தன்யாசி—ஆதி.

உனைத்தி னந்தொழு திலனுன தியல்பினை

உரைத்தி லன்பல மலர்கொடு னடியிணை

உறப் பணிந்தில னொருதவ மிலனுன—தருள் [மாறு

உளத்து ளன்பின ருறைவிட மறிகிலன்

விருப்பொ டுன்சிக ரமும்வலம் வருகிலன்

உவப்பொ டுன்புகழ் துதிசெய விழைகிலன்—மலை [போலே

கனைத்தெழும்பக கடதுபிடர் மிசைவரு
கறுத்த வெஞ்சின மறலிதனுளமுயினர்
கதித்த டார்ந்தெறி கயிறடு கதைகொடு—பொரு
[போதே

கலக்குறுஞ்செய லொழிவற அழிவுறு
கருத்து நைந்தல முறுபொழு தளவைகொள்
கணத்தி லென்பய மறமயில் முதுகினில்—வரு
[வாயே

வினைத்த லந்தனி லலகைகள் குதிகொள
விழுக்கு டைந்துமெ யுருதசை கழுகுண
விரித்த குஞ்சிய ரெனுமவு ணரையமர்—புரி
[வேலா

மிகுத்த பண்பயில் குயில் மொழி யழகிய
கொடிச்சி குங்கும முலைமுக டுழுநறை
விரைத்த சந்தன ம்ருகமத புயவரை—யுடை
[யோனே

தினத்தி னஞ்சதூர் மறைமுனி முறைகொடு
புனற் சொரிந்தலர் பொதியவி ணவரொடு
சினத்தை நிந்தனை செயுமுநி வர்தொழ—மகிழ்
[வோனே

தெனத்தெ னந்தன எனவரி யளிநறை
தெவிட்ட அன்பொடு பருகுயர் பொழில் திகழ்
திருப்பரங்கிரி தனிலுறை சரவண—பெருமாளே.

தீர்க்கசங்கராபரணம்—ஆதி—உசி

எனக்கென்ன இனி—ஆளும் தெய்வம் நீ— எனக்
எந்தை நின்னருள் என்னை பாலிக்க— எனக்

சரணம்

பற்றும் பந்தமும் அற்றுப் போய் விட்டது
ஆசாபாசமும் நாசமாய் விட்டது
சித்த சுத்தியும் தானே தோன்றிற்று
சித்த சங்கல்பம் ஸ்கந்தன் பால் நின்றது—எனக்
பித்தமும் முற்றிற்று முக்தியும் கிட்டிற்று
ஆடலும் பாடலும் அனுதின மாயிற்று
கண்ட கர்மங்கள் காணுமல் போயின
காணுத ஜோதியும் கண்காக்ஷி ஆயிற்று—எனக்

தேகிகதோடி—தேசாதி

குஞ்சு மயிலேறும்-குஞ்சரக்கலாபா
வெஞ்சூருடற் பிளந்த-செஞ்சுடர் வேலா குஞ்சு
எட்டி குடியிலிருக்கும்-ஷஷ்டீசா ஷண்முகா
எட்டாதோ உன்தனருள்-கிட்டாதே உந்தன்பதம்
குஞ்சு
சிக்கலிலே செழித் தோங்கும் செல்வச் சிங்காரா
சுழலிலே சிக்கிக்கொண்டேன் கழலிலே
காத்தருள்வாய் குஞ்சு

*

பூரிகல்யாணி—ஆதி

காணக் கிடைக்காத தங்கம்
கண்டால் விண்டிடும் தனிப்பரமானந்தம் காண

கும்பிடும் தேவர்கள் கோடியனந்தம்
வீழ்ந்திடும் நாம முறைக்கபவ பந்தம் காண

அருவமு முருவான பால குமாரம்
குருவுருவாய் வந்த கௌரி மனோஹரம்
மருவு மடியார்கள் மனத்தில் விஹாரம்
திருப்புகழ்மணி போற்றும் பரப்பிரம ஆகாரம் காண

விருத்தம்

சிவனுடனே சக்தியும் கலந்து நின்ற சீருருவம் நீயே யாகி—பவக்கடலிடைப்புகுந்த பகையசுரர்க்கோர் அந்த கனாகி—தவப்பெரும் செல்வமேயென்ற தபோதனர்க் கோர் தாரகமாகி—அவக்குணஅடி நாயேனை ஆண்ட என் அரசே போற்றி

அசுத்த மசுத்த மென்றே நீரலை குவீர்
அசுத்த மாவதும் மனத்தின் செயலாலே
அசுத்தமாக்கிடும் மனதை நீருக்கிலோ
அசுத்தமற்ற தோர் ஜோதி கண் கூடுமே.

மலவகையால் கட்டுண்ட இந்த உடல மெனும் மந்திரந்தனை உள்ளநாளெலாம் உறுதியெனக் கருதி அலகையெனக் கூத்துமாடி குணமில்லாதஎன் பண்பிலுல் பட்டதோர் பாடும் அலம்—அலம்—உலகெலாமளித்த உமயவள் தன் உளத்திற்கிசைந்த அமுதேநின்கருணைப் பிரவாகம் பொழியும் அபய வலகையால் எந்தனை யாதரித்து மலத்தால் கொண்ட என் மாட்சியை நீ யகற்றி உம்பரும் காணுத நின் திருவருட்காசியை தந்து அடியேனை ஆட்கொள்வாய்-முருகனே மாலோன் மருகனே ஹிமமகுமரி பயந்துதவும் சேயே என்னுள் வளர்ந்து எங்கும் நிறைந்து எனையாட் கொண்ட தேவ தேவே

✷

மனோலய சமாதி

காமியத் தழுந்தி — யிளையாதே
காலர் கைப்படிந்து — மடியாதே
ஓமெழுத் திலன்பு — மிகவூறி
ஓவியத்திலந்த — மருள்வாயே;
தூம மெய்கணிந்த — சுகலீலா
சூரனைக்கடிந்த — கதிர்வேலா
ஏமவெற்புயர்ந்த — மயில்வீரா
ஏரகத் தமர்ந்த — பெருமாளே.

தர்சனம்.

நடபைரவி-திச்ரஜாதி ரூபகம்.

திருமக ளுலாவு மிருபுய முராரி
    திருமருக நாமப் பெருமாள்காண்
ஜெகதல மும்வானு மிகுதிபெ றுபாடல்
    தெரிதரு குமாரப் பெருமாள்காண்
மருவும டியார்கள் மனதில் விளையாடு
    மரகத மயூரப் பெருமாள்காண்
மணிதரளம் வீசி யணியருவிசூழ
    மருவுகதிர்காமப் பெருமாள்காண்
அருவரை கள்நீறு படஅசுரர்மாள
    அமர்பொரு தவீரப் பெருமாள்காண்
அரவு பிறைவாரி விரவுசடைவேணி
    அமலர் குருநாதப் பெருமாள்காண்
இருவினையிலாத தருவினை விடாத
    இமையவர் குலேசப் பெருமாள்காண்
இலகு சிலைவேடர் கொடியினதிபார
    இருதன விநோதப் பெருமாளே. (1)

ஹம்ஸத்வனி - த்ருபுடை.

அந்தகன் வருந்தினம் பிறகிடச்
    சந்ததமும் வந்துகண் டரிவையர்க்
    கன்புருகு சங்கதந் தவிரமுக் குணமாள

அந்திபக லென்றிரண்டையுமொழித்
திந்திரிய சஞ்சலங் களையறுத்
தம்புயபதங்களின் பெருமையை கவிபாடிச்
செந்திலையு ணர்ந்துணர்ந்துணர்வுறக்
கந்தனைய றிந்தறிந் தறிவினிற்
சென்றுசெரு குந்தடந் தெளிதரத் தணியாத
சிந்தையும விழ்ந்தவிழ்ந் துரையொழித்
தென்செய லழிந்தழிந் தழியமெய்ச்
சிந்தைவர என்றுநின் தெரிசனைப் படுவேனோ!
கொந்தவிழ்ச ரண்சரண்சரணெனக்
கும்பிடுபு ரந்தரன் பதிபெறக்
குஞ்சரிகு யம்புயம் பெறஅரக் கருமாளக்
குன்றிடிய அம்பொனின் றிருவரைக்
கிண்கிணிகி ணின்கிணின் கிணினெனக்
குண்டலம சைந்திளங் குழைகளிற் ப்ரபைவீசத்
தந்தனத னந்தனந் தனவெனச்
செஞ்சிறுச தங்கைகொஞ் சிடமணித்
தண்டைகள்க லின்கலின் கலினெனத் திருவான
சங்கரிம னங்குழைந் துருகமுத்
தந்தரவ ருஞ் செழுந் தளர்நடைச்
சந்ததிச கந்தொழுஞ் சரவணப் பெருமாளே. (2)

அருள்வேண்டல்.

திருப்புகழ் கூர

பியாக் - த்ரிச்ரஜாதி - ரூபகம்

வஞ்சகலோப மூடர் தம்பொருளூர்கள் தேடி
மஞ்சரிகோவை தூது பலபாவின்
வண்புகழ் பாரி காரி யென்றிசை வாதுகூறி
வந்தியர்போல வீணி லழியாதே
செஞ்சர ணாத கீத கிண்கிணிநீப மாலே
திண்டிரல் வேல்மயூர முகமாறும்
செந்தமிழ் நாளுமோதி உய்ந்திடஞான மூறு
செங்கனிவாயிலோர் சொலருள்வாயே
பஞ்சவனீடு கூனு மொன்றிடு தாப மோடு
பஞ்சற வாது கூறு சமண்மூகர்
பண்பறு பீலியோடு வெங்கழுவேறவோது
பண்டித ஞான நீறு தருவோனே
குஞ்சரம் யாளி மேவுபைம்புன மீதுலாவு
குன்றவர் சாதிகூடி வெறியாடிக்
கும்பிட நாடி வாழ்வு தந்தவ ரோடுவீறு
குன்றுதோ ருடல்மேவு பெருகாளே.

பரசு—ஆதி—சமம்

காக்க கடனில்லையோ—நோயை
தாக்கநின் வேலில்லையோ ஷண்முகா (காக்க)
வானவள் மணாளா
கானவள் தன் கணவா
மலைமகள் தன் குமரா
வடபழனி முருகா— காக்க
துன்பம் பல எய்திடினும்
இன்பம் சற்று மில்லையெனினும்
கன்மம் ஈது ஈது என்று
நம்பி நம்பி நின்றவரை காக்க

✳

நோயற்றவாழ்வு.

தேசிக தோடி-ஆதி-மத்யமம்.

இருமலு ரோக முயலகன் வாத
மெரிகுண நாசி விடமேநீ
ரிழிவு விடாத தலைவலி சோகை
யெழுகள மாலை யிவையோடே
பெருவயி றீளை யெரிகுலை சூலை
பெருவலி வேறு முளநோய்கள்
பிறவிக டோறு மெனைநலியாத
படியுன தாள்க ளருள்வாயே ;

வருமொரு கோடி யசுரர் பதாதி
மடிய அநேக இசைபாடி
வருமொரு கால வயிரவ ராட
வடிசுடர் வேலை விடுவோனே
தருநிழல் மீதி லுறைமுகி லூர்தி
தருதிருமாதின் மணவாளா
சலமிடை பூவி னடுவினில்வீறு
தணிமலை மேவு பெருமாளே. (1)

விருத்தம்

தேசிகதோடி.

ஒருமையுட னினது திருமலரடி நினைக்கின்ற
வுத்தமர்த முறவுவேண்டும்
உள்ளொன்று வைத்துப் புறம்பொன்று
பேசுவாருறவு கலவாமை வேண்டும்
பெருமைபெறு நினதுபுகழ் பேசவேண்டும்
பொய்மை பேசாதிருக்கவேண்டும்
பெருநெறிபிடித் தொழுகவேண்டும்
மதமான பேய் பிடியாதிருக்கவேண்டும்
மருவு பெண்ணாசையை மறக்கவேவேண்டு
முனை மறவாதிருக்கவேண்டும்
மதிவேண்டும் நின்கருணை நிதிவேண்டும்

நோயற்ற வாழ்வினுன் வாழவேண்டும்
தருமமிகு சென்னையிற் கந்தகோட்டத்துள்
வளர்தலமோங்கு கந்தவேளே
தண்முகத்துய்ய மணியுண்முகச் சைவமணி
ஷண்முகத் தெய்வமணியே.

காலன் அகல

பீலு-ஆதி.

பாதி மதிநதி போது மணி சடை
நாத ரருளிய குமரேசா
பாகுகனிமொழி மாது குறமகள்
பாதம்வருடிய மணவாளா
காது மொருவிழி காகமுற அருள்
மாயனரிதிரு மருகோனே
காலனெனையணுகாம லுனதிரு
காலில் வழிபட அருள்வாயே ;
ஆதி யயனொடு தேவர் சுரருல
காளும் வகையுறு சிறைமீளா
ஆடுமயிலினி லேறி யமரர்கள்
சூழ வரவரு மிளையோனே

சூதமிகவளர் சோலை மருவுசு
வாமி மலை தனி லுறைவோனே
சூரனுடலற வாரி சுவறிட
வேலைவிடவல பெருமானே.

தத்வபோதம்,

மத்யமாவதி-ஆதி.

வாதினையடர்ந்த வேல் விழியர் தங்கள்
மாயமதொழிந்து தெளியேனே
மாமலர்கள் கொண்டு மாலைகள் புனைந்து
மாபத மணிந்து பணியேனே
ஆதியொடுமந்த மாகிய நலங்கள்
ஆறுமுக மென்று தெரியேனே
ஆனதனி மந்த்ர ரூப நிலைகொண்ட
தாடும யிலென்ப தறியேனே
நாதமொடுவிந்து வானவுடல் கொண்டு
நானில மலைந்து திரிவேனே
நாகமணி கின்ற நாதநிலை கண்டு
நாடிய தில் நின்று தொழுகேனே

சோதியுணர்கின்ற வாழ்வு சிவமென்ற
　　சோகம துதந்து　　　　　　எனையாள்வாய்;
சூரர்குலம்வென்று வாகையொடு சென்று
　　சோலைமலை நின்ற　　　　　பெருமாளே.

———

அத்வைத உணர்ச்சிபெற

மலையமாருதம்-ஆதி.

புகரில் சேவல தந்துர சங்க்ரம
　　நிருதர் கோபக்ர வுஞ்சநெ டுங்கிரி
　　பொருதசேவக குன்றவர் பெண்கொடி
புனித பூசுர ருஞ்சுர ரும்பணி　　　[மணவாளா
　　புயச பூதர என்றிரு கண்புனல்
　　பொழிய மீமிசை யன்புது ளும்பிய　　மனனாகி
அகிலபூத வுடம்பு முடம்பினில்
　　மருவு மாருயி ருங்கரணங்களு
　　மவிழ யானுமி ழுந்த இடந்தனி　　லுணர்வாலே
அகில வாதிக ளுஞ்சம யங்களும்
　　அடைய ஆமென அன்றென நின்றதை
　　யறிவிலேனறியும் படி யின்றருள்　　புரிவாயே,
மகரகேதன முந்திகழ் செந்தமிழ்
　　மலய மாருத மும்பல வெம்பரி
　　மளசீ லீமுக மும்பல மஞ்சரி　　வெறியாடும்

மதுக ராரம்விகுஞ்சணி யுங்கர
மதுர கார்முக மும்பொர வந்தெழு
மதன ராஜனை வெந்து விழும்படி முனிபால
முகிழ் விலோசன முஞ்சிறு திங்களு
முதுப கீரத யும்புனை யுஞ்சடை
முடியர் வேதமு நின்று மணங்கமழ் அபிராமி
முகர நூபுர பங்கய சங்கரி
கிரிகு மாரித்ரி யம்பகி தந்தருள்
முருக னேசுர குஞ்சரி ரஞ்சித பெருமாளே.

துஷ்ட நிக்ரக சிஷ்ட பரிபாலனம்.

விருத்தம்.

தோடி.

நின் பக்க லன்பிலாப் பாவியர் படுந்துயரம்
நின்னடியர் தாமுறுவதும்
நினையென்று மறவாத புண்ணியர் பெறுஞ் செல்வம்
நின்மூடர் தான் பெறுவதும்
அன்புடன் நல்லறஞ் செய்தரும சாலிக
ளல்லலான் மன நோவதும்
அறந்தனை மறந்திடு மசத்தியப் பேயர்கள்
அக மகிழ்ந்தே வாழ்வதும்
உன் மகிமை யோவலது கலியுகப் பெருமையோ
யுனையன்றி யணுவசையுமோ

உலகினிற் கண்கண்ட மெய்யான தெய்வமே
யுயர்பரங் குன்றிலுரைவாய்
வன்பகை சூர்வேர் களைந்ததுபோ லென்பகையை
மாற்றிடும் வடிவேலவா
வன்னமயில் வாகனு பொன்னே ரகப்பதியில்
வளர் சாமிநாத குருவே.

மாண்டு - ஆதி.

இச்சைவிரகுடன் மடவாருடனே
செப்ப மருளுட னவமே திரிவேன்
ரத்னபரிபுர இருகா லொருகால் மறவேனே
புத்த ரமணர்கள் மிகவே கெடவே
தெற்குநரபதி திருநீ றிடவே
புக்கஅனல்வய மிகஏ டுயவே உமையாள்தன்
புத்ரனென இசை பகர்நூல் மறைநூல்
கற்ற தவமுனி பிரமா புரம்வாழ்
பொற்பகவுணியர் பெருமானுருவாய் வருவோனே
சத்தமுடையஷண் முகனே குகனே
வெற்பி லெறிசுட ரயிலா மயிலா
சத்தி கணபதி யிளையா யுளையா யொளிகூருஞ்

சக்ரதர அரி மருகா முருகா
உக்ர இறையவர் புதல்வா முதல்வா
தட்ப முளதட வயலூரியலூர் பெருமாளே.

மோக்ஷஸாதனம்.

தோடி - த்ரிபுடை.

இத்தரணி மீதிற் பிறவாதே
எத்தரோடு கூடிக் கலவாதே
முத்தமிழை யோதித் தளராதே
முத்தியடி யேனுக் கருள்வாயே ;
தத்துவமெய்ஞ் ஞானக் குருநாதா
சத்தசொரு பாபுத் தமுதோனே
நித்திய க்ருதா நற் பெருவாழ்வே
நிர்த்தஜெக ஜோதிப் பெருமாளே.

வாழ்வு நிலையாமை.

வாசஸ்பதி—

நிலையாப் பொருளை யுடலாக் கருதி
நெடுநாட்பொழுது மவமேபோய்
நிறைபோய்ச் செவிடு குருடாய்ப்பிணிகள்
நிறைவாய்ப் பொறிகள் தடுமாறி

மலைநீர்ச் சயன மிசையாப்பெருகி
மடிவேற் குரிய நெறியாக
மறை போற்றரிய வெளியாய்ப்பரவு
பலா காட்கமல மருள்வாயே;
கொலைகாட் டவுணர் கெடமாச் சலதி
குளமாச் சுவற முதுசூதம்
குறிபோய்ப் பிளவு படமேற்கதுவு
கொதிவேற் படையை விடுவோனே
அலைவாய்க் கரையின் மகிழ்சீர்க்குமர
அழியாப் புநித வடிவாகும்
அரனுர் கதித பொருள்காட்டதிப
அடியார்க் கெளிய பெருமாளே

ஸ்தோத்ரம்.

கானடா.

சீரான கோல கால நவமணி
மாலாபிஷேக பார வெகுவித
தேவாதி தேவர் சேவை செயுமுக மலராறும்
சீராடு வீரமாது மருவிய
ஈராறு தோளு நீளும் வரியளி
சீராக மோது நீப பரிமள இருதாளும்
ஆராதகாதல் வேடர் மடமகள்
ஜீமூத மூர்வலாரி மடமகள்
ஆதார பூதமாக வலமிட முறைவாழ்வும்

ஆராயு நீதி வேலு மயிலுமெஞ்
ஞானபி ராமதாப வடிவமும்
ஆபாத னேனு நாளு நினைவது பெறவேணும்;
ஏராரு மாடகூட மதுரையில்
மீதேறி மாறியாடு மிறையவர்
ஏழேழு பேர்கள் கூறவருபொரு ளதிகாரம்
ஈடாயவூமர் போல வணிகரி
லூடாடி யால வாயில் விதிசெய்த
லீலாவி சாரதீர வரதர குருநாதா
கூராழி யால் முன் வீய நினைபவ
னீடேறுமாறு பாநு மறைவு செய் மருகோனே
கோபால ராயனேய முளதிரு
கோடாம லார வார அலை யெறி
காவேரி யாறு பாயும் வயலியில்
கோனாடு சூழ் விராலிமலை யுறை பெருமாளே

ஜோதி தர்சனம்

கானடா-ஆதி.

மூலா நிலமதின் மேலே மனதுறு
மோகா டவிசுடர் தனைநாடி
மோனா நிலைதனை நாண வகையிலு
மோதா நெறிமுறை முதல்கூறும்
லீலாவிதமுன தாலே கதிபெற
நேமா ரகசிய வுபதேசம்

நீடு ழிதனிலே வாடா மணியொளி
 நீதா பலமது தருவாயே;
நாலா ருசியமு தாலே திருமறை
 நாலா யதுஜெப மணிமாலே
நாடாய் தவரிடர் கேடா ஹரிஹரி
 நாராயணர்திரு மருகோனே
சூலா திபர்சிவ ஞானர் யமனுதை
 காலார் தரவரு குருநாதா
தோதீ திகுதிகு தீதீ செகசெக
 சோதி நடமிடு பெருமாளே.

அறுமுகப் பெருமை.

விருத்தம்.

அடாணா

எழுதரிய அறுமுகமு மணிநுதலும் வயிரமிடை
யிட்டுச் சமைந்தசெஞ் சுட்டிக்க லன்களுந் துங்கநீள்பன்
னிருகருணை விழிமலரு மிலகுபதி னிருகுழையும்
ரத்நக்குதம்பையும் பத்மக்க ரங்களுஞ்செம்பொனூலும்
மொழிபுகழு முடைமணியு மரைவடமு மடியினையு
முத்தச்ச தங்கையுஞ் சித்ரச்சி கண்டியுஞ் செங்கை
 வேலும்

முழுதுமழ கியகுமர கிரிகுமரி யுடனுருகு
முக்கட்சி வன்பெறுஞ் சத்புத்ரவும்பர்தந் தம்பிரானே

சுத்தசாவேரி - ஜம்பை.

ஆறுமுகம் ஆறுமுகம் ஆறுமுகம் ஆறுமுகம்
ஆறுமுகம் ஆறுமுகம் என்றுபூதி
ஆகமணி மாதவர்கள் பாதமலர் சூடுமடி
யார்கள்பதமே துணைய தென்றுநாளும்
ஏறுமயில் வாகனகு காசரவ ணா எனது
ஈசஎன மானமுன தென்றுமோதும்
ஏழைகள் வியாகுலமி தேதெனவி னாவிலுனை
யேவர்புகழ் வார்மறையு மென்சொலாதோ
நீறுபடு மாழைபொரு மேனியவ வேலஅணி
நீலமயில் வாகவுமை தந்தவேளே
நீசர்கடமோடெனது தீவினையெ லாமடிய
நீடுதனி வேல்விடும டங்கல்வேலா
சீறிவரு மாறவுண னாவியுணுமானைமுக
தேவர்துணை வாசிகரி அண்டகூடஞ்
சேருமழகார் பழநி வாழ்குமர னேபிரம
தேவர்வர தாமுருக தம்பிரானே. (2)

மான ஸீகபூஜை

ஸ்ரீ கல்யாணி

தாயுமானவர்

துள்ளு மறியாமனது பலிகொடுத்தேன் கர்ம
துட்ட தேவதைகளில்லை
துரிய நிறை சாந்த தேவதையா முனக்கே
தொழும் பனன்ப பிஷேகநீ
ருள்ளுறை யிலென்னுவி நைவேத்யம் ப்ராண
ணுேங்குமதி தூபதீப
மொரு கால மன்றிது சதாகால பூசையா
வொப்புவித்தேன் கருணைகூர்
தெள்ளி மறை வடியிட்ட அமுதப்பிழம்பே
தெளிந்த தேனே சீனியே
திவ்யர சமியாவுந் திரண்டொழு பாகே
தெவிட்டாத வானந்தமே
கள்ளனறி வூடுமே மெள்ளமெள வெளியாய்க்
கலக்கவரு நல்லவுறவே
கருதரிய சிற்சபை யிலானந்த நிர்த்தமிடு
கருணாகரக் கடவுளே.

சமய மயக்கம் ஒழிய

மோஹனம்.

அதிருங் கழல்பணிந்து னடியேனுள்
அபயம் புகுவதென்று நிலைகாண
இதயந் தனிலிருந்து க்ருபையாகி
இடர் சங்கைகள் கலங்க அருள்வாயே;
எதிரங் கொருவரின்றி நடமாடும்
இறைவன் தனது பங்கி லுமைபாலா
பதியெங் கிலுமிருந்து விளையாடிப்
பல குன்றிலுமமர்ந்த பெருமாளே.

மந்திரோபதேசம்

பூரிகல்யாணி

அபகார நிந்தைபட் டுழலாதே
அறியாத வஞ்சரைக் குறியாதே
உபதேச மந்திரப் பொருளாலே
உனைநானி னைந்தருட் பெறுவேனோ
இபமாமு கன்தனக் கிளையோனே
இமவான் மடந்தையுத் தமிபாலா
ஜெபமாலை தந்தசற் குருநாதா
திருவாவினன் குடிப் பெருமாளே.

இதர திருப்புகழ் பாடல்கள்

தர்பார்—ஆதி.

கர்ப்பத்தூறி பிறவாதே-கனக்க பாடுற்றழியாதே
திருப்பொற்பாதத்தனுபூதி-சிறக்கபாலித்
தருள்வாயே
பரப்பற்றாருக்குரியோனே பரத்தப்பாலுக்
கனியோனே
திருக்கைசேவல்கொடியோனே ஜெகத்திற்ஜோதிப்
பெருமாளே

பாசு-ஆதி

துள்ளுமதவேள்கை கணையாலே தொல்லை நெடுநீலக்
கடலாலே
மெல்லவருசோலை குயிலாலே மெய்யுருகுமானைத்
தழுவாயே
தெள்ளுதமிழ்பாடல் தெளிவோனே செய்ய குமரேசதிர
லோனே
வள்ளல்தொழு ஞானக்கழலோனே-வள்ளிமணவாளப்
பெருமாளே

கால்யாணி—ஆதி

ஓல மறைக ளறைகின்ற வொன்றது
மேலை வெளியி லொளிரும்ப ரஞ்சுடர்
ஓது கரியை க்ரியையும் புணர்ந்தவ ரெவராலும்

ஓதவரிய துரியங்கடந்தது
போத அருவசுருபம்ப்ரபஞ்சமும்
ஊனு முயிரு முழுதுங் கலந்தது சிவஞானம்

சால வுடைய தவர் கண்டு கொண்டது
மூலநிறைவு குறைவின்றி நின்றது
சாதி குலமு மிலதன்றி யன்பர் சொனவியோமஞ்

சாருமநுப வரமைந்த மெய்
வீடு பரம சுகசிந்து இந்த்ரிய
தாப சபல மறவந்து நின்கழல் பெறுவேனோ!

வால குமர குககந்த குன்றெறி
வேல மயில எனவந்து கும்பிடு
வான விபுதர் பதியிந்த்ரன் வெந்துயர்களைவோனே

வாச களப வரதுங்க மங்கல
வீரகடக புயசிங்க சுந்தர
வாகைபுனையும் ரணரங்க புங்கவ வயலூரா

ஞால முதல்வி யிமயம்ப யந்தமின்
நீலி கவுரி பரமங்கை குண்டலி
நாளு மினிய கனி யெங்க ளம்பிகை த்ரிபுராயி

நாத வடிவி யகிலம்ப ரந்தவ
ளாலிநுதர முளபங்க ரும்புவெ
ஞுவ லரசு மனே வஞ்சி தந்தருள் பெருமாளே.

மோஹனம்—த்ரிபுடை

வாசித்துக் காணெ ணுதது
பூசித்துக் கூடொணுதது
வாய்விட்டுப் பே சொணுதது நெஞ்சினுலே

மாசர்குத் தோணெ ணுதது
நேசர்க்குப் பேரொணுதது
மாயைக்குச் சூழொ ணுதது விந்துநாத

ஓசைக்குத் தூரமானது
மாகத்துக் கீறதானது
லோகத்துக் காதியானது கண்டுநாயேன்

யோகத்தைச் சேருமாறுமெய்ஞ்
ஞானத்தை போதியாயினி
யூனத்தைப் போடிடாதும யங்கலாமோ!

ஆசைப் பட் டேனல் காவல் செய்
வேடிச்சிக் காக மாமய
லாகிப் பொற் பாத மேபணி கந்தவேளே

ஆலித்துச் சேல்கள் பாய்வய
லூரத்திற் காள மோடட
ராரத்தைப் பூண்ம யூரது ரங்கவீரா

நாசிக்குட் ப்ராண வாயுவை
ரேசித் தெட்டாதயோகிகள்
நாடிற்றுக் காணே ணுதென நின்றநாதா
நாகத்துச் சாகை போயுயர்
மேகத்தைச் சேர்சி ராமலே
நாதர்க்குச் சாமி யேசுரர் தம்பிரானே.

ஷண்முகப்ரியா—திச்ர அடை

உலகபசுபாச தொந்த மதுவான
உறவு கிளை தாயர் தந்தை மனைபாலர்
மலசலகு வாச சஞ்ச லமதாலென்
மதி நிலைகெடாம லுன்ற னருள்தாராய்
சலமறுகு பூளை தும்பை யணிசேயே
சரவணபவா முகுந்தன் மருகோனே
பல கலை சிவாக மங்கள் பயில்வோனே
பழநி மலை வாழ வந்த பெருமாளே

கந்தரலங்காரம்

தாவடி யோட்டும் மயிலிலுந் தேவர் தலையிலுமென்
பாவடி யேட்டிலும் பட்டதன் றோபடி மாவலிபான்
மூவடி கேட்டன்று மூதண்ட கூடமுகடுமுட்டச்
சேவடி நீட்டும் பெருமாண் மருகன்றன் சிற்றடியே 1

தெய்வத் திருமலைச் செங்கோட்டில் வாழுஞ்செழுஞ்
சுடரே
வைவைத்த வேற்படை வானவனேமறவேனுனைநான்
ஐவர்க்கிடம்பெறக் காலிரண் டோட்டியதிலிரண்டு
கைவைத்த வீடு குலையுமுன்னேவந்து காத்தருளே. 2

முடியாப்பிறவிக் கடலிற் புகார்முழுதுங் கெடுக்கு
மிடியாற்படியில் விதனப் படார்வெற்றி வேற்பெருமாள்
அடியார்க்கு நல்ல பெருமாளவுணர் குலமடங்கப்
பொடியாக்கியபெருமாடிருநாமம் புகல் பவரே 3

மரணப்ரமாத நமக்கில்லை யாமென்றும் வாய்த்ததுணை
கிரணக்கலாபியும் வேலு முண்டேகிங்கிணிமுகுள
சரணப்ரதாப சகிதேவி மங்கல்யதந்து ரக்ஷா
பரணக்ரு பாகர ஞானகர சுரபாஸ்கரனே 4

மாலோன் மருகனை மன்றுடி மைந்தனைவானவர்க்கு [ற்
மேலானதேவனை மெய்ஞ்ஞான தெய்வத்தை மேதினியி
சேலார் வயற்பொழிற் செங்கோடனைச் சென்று
கண்டு தொழ
நாலாயிரங் கண்படைத்திலனே யந்த நான்முகனே 5

பத்தித்திரு முகமாறுடன் பன்னிருதோள்களுமாய்த்
தித்தித்திருக்கு மமுதுகண்டேன் செயன்
மாண்டடங்கப்
புத்திக் கமலத்துருகிப் பெருகிப் புவன மெற்றித்
தத்திக்கரைபுரளும் பரமானந்த சாகரத்தே. 6

அநுபூதி.

ஆடும் பரிவே லணிசே வலெனப்
பாடும் பணியே பணியா வருள்வாய்
தேடுங் கயமா முகனைச் செருவிற்
சாடுந்தனியா னைசகோ தரனே. (1)

செம்மான் மகளைத் திருடுந் திருடன்
பெம்மான் முருகன் பிறவா னிறவான்
சும்மா விருசொல் லறவென் றலுமே
அம்மா பொருளொன் றுமறிந் திலனே. (2)

முருகன் குமரன் குகனென்றுமொழிந்
துருகுஞ் செயல்தந் துணர்வென் றருள்வாய்
பொருபுங் கவரும் புவியும் பரவுங்
குருபுங் கவவெண் குணபஞ் சரனே. (3)

கருதா மறவா நெறிகா ணவெனக்
கிருதாள் வனசந் தரவென் றிசைவாய்
வரதா முருகா மயில்வா கனனே
விரதா சுரசூ ரவிபா டணனே. (4)

தூசா மணியுந் துகிலும் புனைவாள்
நேசா முருகா நினதன் பருளால்
ஆசா நிகளந் துகளாயினபின்
பேசா வனுபூதி பிறந்ததுவே (5)

உருவா யருவா யுளதா யிலதாய்
மருவாய் மலராய் மணியா யொளியாய்
கருவா யுயிராய்க் கதியாய் விதியாய்
குருவாய் வருவா யருள்வாய் குகனே. (6)

ஆண்டவன் உண்டென்ற சாக்ஷியம்.

மாமலர் பூக்குது சோலையிலே—மணம்
வீசியடிக்குது நாசியிலே—அரும்
பூக்களைக் கண்டு நீ திண் மையிலே—மரம்
உண்டென்றிருப்பாய் நீ—தீங்குயிலே
பித்தர்கள் பிதற்றிடும் வித்தகனே—ஈசன்
நித்தியமானதோர் சத்தியமே—பெரும்
புத்தியுள்ளார்கள் வீணில் மயங்கியே
பித்துக் கொள்வார்களோ தீங்குயிலே.

*

அகந்தையை அகற்றும் ஆண்டவனருள்

எனையீன்ற பரம் பொருளே
எனையாண்ட பரம் பொருளே
யான் போற்றும் பரம் பொருளே
தாள் போற்றி பரம் பொருளே

ஏனதெனவே பேசப் பொருள்
வகுத்திலையே பரம் பொருளே
உனதெனவே யெனை யளித்தேன்
ஏன்று கொள்வாய் பரம் பொருளே
மனதிலுந்தன் மலர் பதத்தை
மருவவைப்பாய் பரம்பொருளே
கனத்தை நீக்கி வனப்பையிந்து
இனத்தைச் செய்வாய் பரம்பொருளே

*

"ஆண்டவனருளிய தத்வோபதேசம்."

தன்னந்தனியிலே, தானென்ற நிலையிலே,
நின்றதோரொன்றிலே, தவிர்ந்ததோர் நினைவிலே,
நீயெனவும் நானெனவும் பேதமாக்கி,
எல்லாமாய நீயே நானென்றுணருமறிவினையு
மறைத்து,
ஆணவமெனும் பொல்லாத அந்தகனுக்காளாக்கி,
ஒட்டாதனவாய மாயை கரும மலங்களை யெல்லாம்,
ஆசையெனும் பெரும் பசைப் பற்றினால்,
ஒட்டிவித்து,
கருவினில் கொண்டதோர் பிண்டந்தனை,
நீ நினைத்தவாங்கே பெருங்கூத்தாட்டிவித்து,

கடையினில் புட்டிட்ட பிண்டத்தை, சுட்டிடும்
தெய்வமே!
உன் சூழ்ச்சி உன்னருளால் யானறிந்தேன்
அண்டந்தனில் விளையாடும் எந்தையே,
எம்மானே எந்தனை நீ அறிவித்து,
என்னுள்ளம் ஆனந்த வெள்ளமாய் நிருவித்து,
அடியேனை நீ யென்றும் ஆட்கொள்ளல் வேண்டும்!
நீக்கமற நிறைவித்து நீருக நிர்த்தமிடு
நிலமவடிவாய் நின்ற என்னருட் ஜாதியே!
உண்ணின்ற பரஞ்ஜோதியே!

ஓம் தத் ஸத்.

அடியார் பெருமை.

தேவேந்திர சங்க வகுப்பு

உதயரவி சந்த்ரிகா.

தரணியிலரணிய முரணிய ணியனுட றனைநக
நுதிகொடு, சாடோங்குநெடுங்கிரி யோடேந்துபயங்கரி
தமருகபரிபுர வொலிகொடு நடநவில் சரணிய
சதுர்மறை, தாதாம்புய மந்திரவேதாந்த பரம்பரை

சரிவளைவிரிசடை யெரிபுரை வடிவினள் சததளமுகுளித
தாமாங்குச மென்றிரு தாளாந்தர வம்பிகை
தருபதி சுரரொடு சருவிய வசுரர்க டடமணி முடிபொடி,
தாளும்படி செங்கையில் வாள்வாங்கிய சங்கரி

இரணகி ரணபட மயின்ம்ருக மதபுளகிதவிள முலையிள
நீர்தாங்கினுடங்கிய நூல்போன்ற மருங்கினள்
இறுகியசிறுபிறையெயிறுடையமபடரெனதுயிர்கொள
வரின், யானேங்குதல் கண்டெதிர்தானேன்று
கொளுங்குயில்

இடுபலி கொடுதிரி யிரவல ரிடர்கெட விடுமனகரதல,
வேகாம்பரையிந்திரை மோகாங்கசு மங்கலை
எழுதியபடமென விருளறுசுடரடியிணைதொழுமவுனிக
ளேகாந்தசு கந்தருபாசாங்குச சுந்தரி

கரணமு மரணமு மலமொடு முடல்படு கடுவினை கெட
நினை, காலாந்தரி கந்தரி நீலாஞ்சனி நஞ்சுமிழ்
கனலெரி கணபண குணமணி யணிபணி கனவளை
மரகத காசாம்பர கஞ்சுளி தூசாம்படி கொண்டவள்

கனை கழனிணையல ருயிரவி பயிரவி கவுரிக மலைகுழை
காதார்ந்த செழுங்கழு நீர்தோய்ந்த பெருந்திரு
கரை பொழி திருமுக கருணையி லுலகெழு கடனிலை
பெறவளர், காவேந்தியபைங்கிளி மாசாம்பவி தந்தவன்

அரணெடு வடவரை யடியொடு பொடிபட வலைகடல்
கெடவயில், வேல்வாங்கிய செந்தமிழ்நூலோன்குமரன்
குகன்

அறுமுகனொரு பதொடிருபுய னபினவ னழகிய குறமகட்
டார்வேய்ந்த புயன்பகை யாமாந்தர்க ளந்தகன்

அடன்மிகு கடதடவி கடித மதகளி றனவர தமுமுக
லாமாந்தர்கள் சிந்தையில் வாழ்வாம்படி செந்திலில்

அதிபதி யெனவரு பொருதிறன் முருகனை யருள்பட
மொழிபவ, ராராய்ந்து வணங்குவர்தேவேந்திரசங்கமே

---

1. சீர் பெருகும் ஸச்சித் ஆனந்த தேசிக
சின்மயனே குருநாதா
பார்முழுதும் பரமாகி நிறைந்திட்ட என்
பாக்கியமே குருநாதா

2. யார்தருவார் எனக்கருளினல் அனுபவம் ஆண்ட
வனே குருநாதா
பேரறிவாகிய பிரம்ம நிலைகண்டு
பேசறியேன் குருநாதா

3. அந்தகன்போல் வீணய் அலைந்து திரிந்த என்னை
ஆள்பவனே குருநாதா
சிந்தை தெளிந்தெற்கு சிவபதமருள் செய்வீர்
தேசிகனே குருநாதா

4. காசம் படர்ந்த கண்ணை கடுவெளியாக்கிவைத்த
காரணனே குருநாதா
பாசமறுத்து என்னை பதிதனில் நாட்டுவித்த
பண்டிதனே குருநாதா

5. மரமேறி கைவிட்ட மானிடர்போலேநான் மாண்டு
பிறவாமல் நாதா
பரமெனக் கீந்ததும் தேவரீரல்லவோ தேசி
கனே குருநாதா

6. நித்தநிரஞ்சன நிர்மலமாகிய நிர்குணனே குருநாதா
ஸத்தியஞான மனந்தமதாகிய
சாச்வதமே குருநாதா.

சிவவாக்கியர்

எங்கு முள்ள யீசனார்-எம்முடல் புகுந்த பின்
பங்கு கூறு பேசுவார்-பாடு சென்றணுகிலார் [தோ
எங்கள் தெய்வம் உங்கள் தெய்வம் என்று பேதமுள்ள
உங்கள் பேதமன்றி அந்த உண்மைபேத மில்லையே

பரோபகார சிந்தாமணி

மெய் வருத்தம் பாரார்–பசிநோக்கார்–கண் துஞ்சார்
எவரெவர் தீமையும் மேற்கொள்ளார்–செவ்வி
அருமையும் பாரார்–அவமதிப்பும் கொள்ளார்–
கருமமே கண்ணாயினார்

சடகோப நம்மாழ்வார்

குன்றம் யேந்தி குளிர்மழை காத்தவன்
அன்று ஞாலம் அளந்த பிரான் பரன்
சென்று சேர்திரு வேங்கிடமாமலை
ஒன்றுமே தொழ நம்வினை ஓயுமே.

ராமலிங்கஸ்வாமிகள்

நான் மறந்தே னெனினும் எனைத்தான் மறவா னெனது-நாயகனென் றுடுகின்றேன் எனினும் இது வரையும், வான்மறந்தேன் வானவரை மறந்தேன்-மாலயனை மறந்தேனம், உருத்திரரை மறந்தேன் என்னுடைய, ஊன் மறந்தேன், உயிர்மறந்தேன், உணர்ச்சியெலாமறந்தேன் - உலகமெலா மறந்தே னிங்குன்னை மறந்தறியேன்-பால்மறந்தகுழவியைப்போல் பாரேலிங் கனையே பரிந்து நின தருட்ஜோதிபுரிந்து மகிழ்ந்தருளே.

கோடையிலே யிளைப்பாற்றிக்கொள்ளும் வகை கிடைத்த குளிர் தருவே தருநிழலே நிழல்கனிந்த கனியே ஓடையிலே யூறுகின்ற தீஞ்சுவைத்தண்ணீரே உகந்த தண்ணீரிடைமலர்ந்த சுகந்த மணமலரே மேடையிலே வீசுகின்ற மெல்லிய பூங்காற்றே மென்காற்றில் விளை சுகமே சுகத்திலுறும் பயனே ஆடையிலே யெனை மணந்த மணவாளா பொதுவில் ஆடுகின்ற வரசேயென் அலங்கலணிந்தருளே.

சேக்கிழார்

சுற்றுநான் மறைகளார்ப் பத்தூரியம் சங்கமோங்கச்
கற்ற நான் முகத்தோன் வேள்விச் சடங்கு நூல்
கரைந்தவாற்றுன்
முற்ற மங்கல நாண் சாத்தி புழுதுலகின்ருள் செங்கை
பற்றினன் பற்றிலார்க் கேவீடருள் பரமயோகி

பெரிய புராணம்.

உலகெலா முணர்ந்து ஒதற் கரியவன்
நிலவுலாவிய நீர்மலி வேணியன்
அலகில் சோதியன் அம்பலத் தாடுவான்
மலர் சிலம்படி வாழ்த்தி வணங்குவாம்.

கைவல்யம்

காம மாதிகள் வந்தாலும் கணத்தில் போய் மனத்தில்
பற்றுர்
தாமரை யிலேத் தண்ணீர் போல் ஜலத்தோடும் கூடிவாழ்
வார்
பாமரரென காண்பிப்பார் பண்டிதத் திறமை காட்டார்
ஊமருமாவர் உள்ளத்து வகையாம் ஜீவன் முக்தர்.

கடுவெளிசித்தர்

அன்பெனு நன்மலர் தூவி பர
மானந்த தேவனடியிணை மேவி
இன்பொடு முன்னுடலாவி நாளும்
ஈடேற்ற தேடாய் நீயிங்கே.

சுவாமிமலே

ஒருதரஞ் சரவண பவாவென்று சொல்பவ
ருளத்தி னினேத்த வெல்லா
முடனேகை கூடுமென வேதங்கள் மொழியுதே
யுண்மை யறிவான பொருளே
பரிவாகவே யனந்தந் தரஞ் சரவண
பவா வென்று நான் சொல்லியும்
பாங்குமிகு காங்கேயா வடியேனே னெண்ணியது
பலியாதிருப்பதேனே
சூரபரா முருகையா—கந்தா கடம்பாசொல்
குமார குகா ஷண்முகா
கோலா கலா வெற்றி வேலா வெனக்கருள்
கொடுத்தாள் வைமுத்தையனே
மருமலர்க் குழலழக தேவகுஞ்சரிவள்ளி
மணவனே யென்றுணவனே
வன்னமயில் வாகனு பொன்னே ரகப்பதியில்
வளர் சாமி நாத குருவே

அகப்பேய் சித்தர்

பிறவி தீரவென்ருல் அகப்பேய் பேதகம் பண்ணுதே
துறவி யானவர்கள் அகப்பேய் சும்மாயிருப்பார்கள்
ஆரலேந்தாலும் அகப்பேய் நீயலேயாதேயடி
ஊரலேந்தாலும் அகப்பேய் யொன்றையும் நாடாதே
தேளுறுபாயுமடி அகப்பேய் திருவடிகண்டோர்க்கே
ஊனுறுமில்லேயடி அகப்பேய் யொன்றையும்நாடாதே
தூராதி தூரமடி அகப்பேய் தூரமுமில்லேயடி
பாராமற்பாரடியோ அகப்பேய் பாழ்வினை தீரவென்ருல்

சுந்தரர்

அஞ்சினுர்க்கரணுதி யென்றடி யேறுநான்மிகவஞ்
சினேன்
அஞ்சலென்றடித் தொண்டனேற்குஅருணல்கினுய்க்
கழிகின்றதென்
பஞ்சின் மெல்லடிப்பாவைமார் குடைந்தாடுபாண்டிக்
கொடுமுடி
நஞ்சணிகண்ட நான்மறக்கினுஞ் சொல்லுநா
நமச்சிவாயவே

மாணிக்க வாசகர்

கிளிவந்த மென் மொழியாள்—கேழ்கிளரும்பாதியனை
வெளிவந்த மாலயனுங்காண்பரிய வித்தகனைத்

தெளிவந்த தேறலைச் சீரார் பெருந்துறையில்
எளிவந்திருந்திரங்கி யெண்ணரிய இன்னருளால்
ஒளிவந்தென் னுள்ளத்தினுள்ளே யொளி திகழ
அளிவந்த அந்தணனைப்பாடுதுங்காணம் மானாய்

ஞானசம்பந்தர்

மான மாக்குவன--மாசுநீக்குவன வானையுள்
கச் செலும் வழிகள் காட்டுவன தேனும்வண்
டும் மிசைபாடுந்தேவன் குடி ஆனஞ்சாடும்
முடியடிகள் வேடங்களே.

கவிகுஞ்சரிபாரதியார்

தரணி தனிலாறுபத் தறு கோடி தீர்த்தமுன்
சரவணத்துள்ளடக்கம்
சாற்றுமோரெழு கோடிமந்திரங்களுமுன்
சடா க்ஷரத்துள்ளடக்கம்
மேலான தேவாலயங்களுமு னாறுபடை
வீட்டினிற் குள்ளடக்கம்
இரவிமுதல் முப்பத்து முக்கோடி தேவருமு
னிதய கமலத்தடக்கம்
ஈரே ழுபுவன முதலண்டங்கள் பலவுமு
னிடத்தினி லடக்கமையா

வரிசை மிருபக்த ஜனபரிபாலனுமோக
வள்ளி குஞ்சரி மணாளா
வனஜமலரயன் மதனை யருள்ஸரஸகோபால
மருக சரவணமுருகனே.

அப்பர்

விடிவதுமே வெண்ணீற்றை மெய்யிற்பூசி
வெளுத்தமைந்த கீளொடு கோவண முந்தற்று
செடியுடைய வல்வினைநோய் தீர்ப்பாயென்றுஞ்
செங்கதிக்கு வழிகாட்டுஞ் சிவனேயென்றும்
துடியனைய யிடைமடவாள் பங்காவென்றும்
சுடலைதனில் நடமாடுஞ் சோதியென்றும்
கடிமலர்தூய்த் தொழுமடியார் நெஞ்சினுள்ளே
கன்றுப்பூர் நடுத்தறியைக் கரணலாமே.

பட்டினத்தார்

ஓடு மெடுத்து அதளாடையுஞ் சுற்றியுலாவிமெள்ள வீடுகடோறும் பலி வாங்கியே விதியற்றவர் போல் ஆடும் அருட் கொண்டிங் கம்பலத்தே நிற்கு மாண்டி தன்னைத் தேடுங் கணக் கென்ன காண் சிவகாம சவுந் தரியே.

தாயுமானவர்

வாரா தெலா மொழிய வருவன வெலா மெய்த மனது சாக்ஷிய தாகவே, மருவ நிலை தந்ததும் வேதாந்த சித்தாந்த மரபு சமரச மாகவே, பூராய மாயுணர வூக

மது தந்ததும் பொய்யுடலை நிலை யன்றெனப், போத நெறி தந்ததுஞ் சாசுவதவானந்த போகமே வீடென் னவே, நீராள மாயுருக வுள்ளன்பு தந்தது நின்னதரு ளின்னு மின்னு, நின்னையே துணையென்ற வென்னை யே காக்கவொரு நினைவு சற்றுண்டாகிலோ, பாரா தியறியாத மோனமே யிடை விடாப் பற்றுக நிற்க வருள்வாய், பார்க்குமிட மெங்குமொரு நீக்கமற நிறை கின்ற பரிபூரணாநந்தமே.

மங்களம்

மோஹனம்.

ஏறுமயிலேறி விளையாடு முக மொன்றே
ஈசருடன் ஞான மொழி பேசு முக மொன்றே
கூறுமடியார்கள் வினைதீர்க்கு முகமொன்றே
குன்றுருவ வேல்வாங்கி நின்ற முகமொன்றே
மாறுபடு சூரரை வதைத்த முகமொன்றே
வள்ளியை மணம்புணர வந்த முகமொன்றே
ஆறுமுக மானபொருள் நீயருளல் வேண்டும்
ஆதிய யருணுசலம மர்ந்த பெருமாளே. (1)

மோஹனம்

கற்றவர் விழுங்குங் கற்பகக்கனியை கரையிலாக்
கருணை மாகடலை
மற்றவரறியா மாணிக்க மலையை மதிப்பவர் மனமணி
விளக்கை

செற்றவர் புரங்கள் செற்ற வெஞ்சிவனைத் திருவீழி
மிழலை வீற்றிருந்த
கொற்றவன் றன்னைக் கண்டு கண்டுள்ளங் குளிர
வென்கண் குளிர்ந்தனவே.

சுருட்டி

ஜயாநந்த பூமன் ஜயாபாரதாமன்
ஜயாமோக கீர்த்தே ஜயாநந்தமூர்த்தே
ஜயாநந்த ஸிந்தோ ஜயாசேஷ பந்தோ
ஜயத்வம் ஸதாமுக்திதானே சஸம்போ. (3)

சௌராஷ்டரம்.

காலமொடு தேசவர்த்த யானமாதி
கலந்துநின்ற நிலைவாழி கருணைவாழி
மாலறவும் சைவமுதன் மதங்களாகி
மதாதீதமான அருள் மரபுவாழி
சாலமிகவெளியே னிவ்வழக்குப்பேச
தயவுவைத்து வளர்த்த அருட்டன்மைவாழி
ஆலடியில் பரம குருவாழி வாழி
அகண்டிதாகார அருளடியார் வாழி. (4)
வாழ்க அந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெலா மர னாமமே
சூழ்கவையக முந்துயர் தீர்க்கவே. (5)

பொங்கும் மங்களம் எங்கும் தங்குக.
வீங்கும் வேனில வேலு மோங்குக.

தமிழில்

			அ.	பை.
1.	யஜுஸ் ஸந்தியாவந்தனம் முதலியன	...	2	0
2.	ருக் ஷை	...	2	6
3.	சாமளா தண்டகம்	...	1	0
4.	விஷ்ணு ஸகஸ்ரநாமாவளி	...	3	0
5.	ஸாமவேத ஸந்தியா வந்தனம் முதலியன	...	2	6
6.	ஸ்தோத்ரமாலா அல்லது ஸ்துதிமஞ்சரி	...	3	0
7.	கல்பத்ரயம் (கணபதி, ஸரஸ்வதி, வரலக்ஷ்மி பூஜைகள்)	...	4	0
8.	விஷ்ணு ஸகஸ்ரநாமம்—கிளேஸ்	...	6	0
9.	ஸுப்ரமண்ய ஸ்தோத்ரம்	...	2	0
10.	லக்ஷ்மி ஸகஸ்ரநாமம்	...	6	0
11.	லலிதா ஸகஸ்ரநாமம்	...	6	0
12.	ஸுப்ரமண்ய பூஜாவிதி	...	3	0
13.	புருஷஸூக்தம் முதலியன	...	2	0
14.	இந்திராக்ஷி சிவகவசம்	...	2	0
15.	ஆதித்யஹ்ருதயம் (அர்த்தத்துடன்)	...	2	0
16.	ஸௌந்தர்யலஹரி	...	2	0
17.	பஜகோவிந்தம், கோபிகா கீதை	...	1	0
18.	ஸுப்ரமண்ய ஸகஸ்ரநாமம்	...	6	0
19.	லக்ஷ்மி அஷ்டோத்ரம் (பதவுரையுடன்)	...	2	0
20.	சிவாநந்தலஹரி	...	2	0
21.	யஜுர் உபாகர்மம்	...	2	0
22.	நவக்ரஹ ஸ்தோத்ரம்	...	2	6
23.	பூஜாராமாயணம்	...	1	0
24.	அகிலாண்டேச்வரி அக்ஷரமாலிகை	...	1	6
25.	யஜுஸ் ஸந்தியா பாஷ்யம்	...	5	0
26.	சங்கராந்தி பூஜை	...	2	0
27.	மார்க்கபந்துஸ்தோத்ரம் அர்த்தத்துடன்	...	2	0
28.	நித்யஅனுஷ்டானவிதி	...	6	0